| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | செல்வராஜ் | நாள் | 17.11.2021 |
| தகப்பனார் பெயர் | மாரியப்பன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எம்.காம் படித்துள்ளேன். நான் ஆடிட்டராக உள்ளேன். என்னுடைய பணிநிமித்தமாக பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை குறித்து எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். சர்வே எண்களை குறித்து தெரியுமா என்றால் தெரியும். நான் ஈரோட்டில் பணிபுரிந்து வருகிறேன். ஈரோட்டில் 20 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்தின் சர்வே எண்.252/5, 10, 11. வழக்கு சொத்தின் புலவரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புலவரைடம் வழக்குசொத்திற்கானது என்றால் ஆமாம். அது பி.வா.சா.ஆ.1. புலவரைபடத்தில் உள்ள முன்பக்கம் வடக்கு பக்கம் என்றால் ஆமாம். சர்வே எண்.252/5 க்கு கிழக்கே என்ன சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண்.252/8 உள்ளது. சர்வே எண்.252/5 க்கு வடக்கே சர்வே எண்.252/7 உள்ளது. சர்வே எண்.252/5 க்கு தெற்கே 252/4 உள்ளது. சர்வே எண்.252/5 க்கு மேற்கே என்ன உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.2 மாதிரி வரைபடம் எங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் திசை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடவில்லை. சர்வே எண்.252/5–யை ஒட்டி 252/10, 11 உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ல் 252/5 யை ஒட்டி 252/10, 11 உள்ளதா என்றால் இல்லை. புலவரைபடத்தில் உள்ளது போல் மாதிரிவரைபடத்தில் காணப்படவில்லை என்றால் ஆமாம். மாதிரிவரைபடம் தவறு என்றால் 10, 11 குறிப்பிட்டுள்ளது தவறு. மாதிரிவரைபடத்தில் தடம் உள்ளதாக கூறும் இடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புலவரைபடத்தில் 252/5 யை ஒட்டி தடம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ல் கூறியுள்ள மாரியப்பனின் தகப்பனார் பெயர் என்னவென்றால் வெங்கட்ராமன். தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் கூறியுள்ள மாரியப்பனின் சர்வே எண் என்னவென்றால் 252/8, 9. முனியப்பனின் நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. கோவிந்தனின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. முனியகவுண்டரின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. நிறைய சர்வே எண்கள் உள்ளது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி என்னுடைய தகப்பனார். என்னுடைய தகப்பனார் என்ன சாட்சியம் அளித்துள்ளார், என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையுடன் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. நான் கூறியுள்ள சலான் என்னாலோ, என் தகப்பனாராலோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நானோ, என்னுடைய தகப்பனாரோ பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வழக்குசொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மாரிமுத்து மகன் மாரியப்பன் பெயரில் உள்ளது அவர் என்னுடைய அப்பாவின் தாத்தா. வா.சா.ஆ.1 வம்சாவழிபட்டியல் என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்தது என்றால் ஆமாம். என்னுடைய தாத்தா பெயர் வெங்கட்ராமகவுண்டர். வெங்கட்ராமகவுண்டரின் அப்பா பெயர் மாரிமுத்து. மாரிமுத்துவிற்கு 2 மகன்கள், 1

மகள். வெங்கட்ராமகவுண்டர், தாசகவுண்டர், ரங்காயி ஆகியோர் மாரிமுத்துவின் வாரிசுகள். வெங்கட்ராமகவுண்டர், தாசகவுண்டர் இறந்துவிட்டனர். தாசகவுண்டருக்கு 2 மகன்கள், 4 மகள்கள். சின்னபையன், மாரியப்பன் இறந்துவிட்டார், கோவிந்தம்மாள், மாரியம்மாள், பெருமாயி, ராமாத்தாள். வெங்கட்ராமனுக்கு என்னுடைய தகப்பனார் மாரியப்பன், முனியப்பன், மாரி இறந்துவிட்டார், பெருமாயி, சின்னபிள்ளை இறந்துவிட்டார். வா.சா.ஆ.1 ல் நான் கூறியுள்ள அனைத்து வாரிசுகள் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பெண்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை. மாரிமுத்துவின் மகன் S என குறிப்பிட்டு அவர் இறந்துவிட்டார் எனவும், குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ல் முழுவிவரத்தையும் குறிப்பிடவில்லை என்றால் பெண்கள் பெயர் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.1 ல் மாரிமுத்து மகன் மாரியப்பன் என குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 வம்சாவழிப்பட்டியல் அடிப்படையில் எங்களுடைய குடும்பத்தில் மாரிமுத்து மகன் மாரியப்பன் இல்லை என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பட்டா மாரிமுத்து மகன் மாரியப்பன் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். வழக்கு சம்மந்தப்பட்ட சர்வே எண் தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த கணிணி பட்டா பி.வா.சா.ஆ.2. பி.வா.சா.ஆ.2 ன்படிக்கு மாரிமுத்து மகன் மாரியப்பன் எங்களுடைய குடும்பத்தில் இல்லை எனவும், வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்டது.

பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.